செ.வெ.எண்: 331 நாள்: 28.4.2020

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கியுள்ள பீகார் மாநில தொழிலாளர் குடும்பங்களுக்கு அம்மாநில அரசினால் வழங்கப்படும் ரூ.1,000 கொரோனா நிவாரண உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கியுள்ள பீகார் மாநில தொழிலாளர் குடும்பங்களுக்கு அம்மாநில அரசினால் வழங்கப்படும் ரூ.1,000 கொரோனா நிவாரண உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அனைத்து தொழிற்சாலைகள், கட்டுமான நிறுவனங்கள் உள்ளிட்டவைகள் மூடப்பட்டுள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திலும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பீகார் மாநில அரசின் மூலமாக கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் பல்வேறு பகுதிகளில் தங்கியுள்ள பீகார் மாநிலத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.1,000 நிதி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்நிதி உதவித்தொகையினை பெற www.aapda.bih.nic.in என்ற மின்னஞ்சல் முகவரியில் பயனாளியின் ஆதார் அடையாள அட்டை, பீகார் மாநிலத்தில் பயனாளியின் பெயரில் உள்ள வங்கியின் புத்தக நகல், சுய புகைப்படம் ஆகியவற்றினை சமர்பித்து இந்த உதவித்தொகையினை பீகார் மாநில தொழிலாளர் குடும்பத்தினர் பெற்று பயன்பெறலாம்.

மேலும் இது தொடர்பான கூடுதல் விவரங்களை பீகார் மாநில அரசு அறிவித்துள்ள 011-23792009, 23014326, 23013884, 0612-2294204, 2294205 என்ற தொலைபேசி எண்களையும் தொடர்பு கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கியுள்ள பீகார் மாநில தொழிலாளர் குடும்பங்கள் அம்மாநில அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள இந்நிவாரணத் தொகையினை பெற்று பயனடையலாம்.

இத்தகவலினை பீகார் மாநில தொழிலாளர்களை பணியமர்த்தி உள்ள நிறுவனங்களின் உரிமையாளர்கள், ஒப்பந்ததாரர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் தங்கியுள்ள பீகார் மாநில தொழிலாளர்கள் இந்நிதி உதவித்தொகையினை பெற்றிட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**